

# SRES NFIR





# தென் பகுதி இரயில்வே தொழிலாளர் சங்கம்

மத்திய சங்கம் – பெரம்பூர்

## 2018 புத்தாண்டு, பொங்கல் & குடியரசு தின நல்வாழ்த்துக்கள்

அன்பார்ந்த தொழிலாள சகோதர, சகோதரிகளுக்கும், குடும்பத்தாருக்கும் SRES - NFIR **2018ம் ஆண்டின் இனிய புத்தாண்டு, பொங்கல் மற்றும் குடியரசு தின நல்வாழ்த்துக்களை தெரிவிக்கிறது.** 07-02-1919 ஆம் ஆண்டு பெரம்பூரில் SRES துவங்கப்பட்டு, 3-9-1927ம் ஆண்டு அண்ணல் மகாத்மா காந்தி மற்றும் கஸ்தூரிபாய் அம்மையார் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு 99ஆம் ஆண்டில் தொழிலாளர்களின் பேராதரவோடு அடியெடுத்து வைத்து 2019ல் நூற்றாண்டை கொண்டாட உள்ளோம் என்பதை தெரியப் படுத்துகிறோம். ஆங்கிலேயரின் அடிமை சாசனத்தி-ருந்து நாடு விடுதலை பெற SRES சுதந்திர போராட்டத்தில் முழுமையாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு பல்வேறு அறப்போராட்டங்களை இரயில்வேயில் நடத்தி ஆங்கிலேயரை திணற வைத்தது அன்று!

பெரம்பூரில் உள்ள SRESன் மத்திய சங்க ஒற்றுமை நிலையத்திற்கு தேசிய தலைவர்களான திரு. **வல்லபாய் படேல்,** சட்டமாமேதை **Dr. B.R. அம்பேத்கார்** திரு. **ஜவஹர்லால் நேரு,** திரு. **ஜெயபிரகாஷ் நாராயணன்,** திரு. **K.காமராஜர்** போன்ற பலர் வருகை தந்து சிறப்பித்துள்ளாரக்ள். 1929 முதல் 1934 வரை SRESற்கு தலைவராக இருந்த திரு. **V.V.கிரி** அவர்கள் **இந்திய நாட்டின் குடியரசு தலைவராக** பொறுப்பேற்று பெருமை சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இரயில்வே தொழிலாளர்களுக்காக பல்வேறு நன்மைகளை செய்து தன் வாழ்நாள் முழுவதும் தன்னலமின்றி உழைத்திட்ட தொழிற்சங்க மாமேதை மறைந்த திரு. **T.V.ஆனந்தன்** Ex.M.P. அவர்களை நெஞ்சில் நினைத்து பார்க்கிறோம். அன்று இரயில்வே தொழிலாளர்களுக்காக பென்ஷன் திட்டத்தை அவர் கொண்டு வந்தபோது கேவலமாக பேசியவர்கள் எல்லாம் பிறகு ஓய்வு பெற்றவுடன் அவர்கள் வாழும் காலத்தில் தான் அதன் மகிமையை கண்டு வியந்து பாராட்டியதும், தவறாக பேசியதற்கு வருந்தியதும் உண்மை. இரயில்வே தொழிலாளர்களுக்கு நல்லதை செய்வேன் என்று சொல்லி தற்போது ஆட்சி செய்கிற மத்திய அரசின் தொழிலாள விரோத போக்கை கண்டித்து SRES - NFIR போராடி வருகிறது இன்று! அன்று முதல் இன்று வரை மத்திய அரசிடம் பலகட்ட பேச்சுவார்த்தை நடத்தியும் பல்வேறு போராட்டங்களை வழி நடத்தியதின், பயனாகத் தான் ஏழு சம்பள கமிஷன்களை அமைத்தது மட்டுமல்லாமல் அதனோடு விவாதம் செய்து பல உத்திரவுகளை பெற்று அமுல்படுத்திய சங்கம் தான் SRES - NFIR என்பதை அனைவரும் அறிவீர்கள்.

### SRES - NFIR அன்று செய்த சாதனைகளில் சில!

1. தாஸ் பாடி கமிட்டி மூலம் 41 ஆண்டுகளாக 6 மாதத்திற்கு ஒரு முறை DA உயர்வு பெற்றுத் தந்தது.
2. 1979ல் போனஸ் சட்டத்தை அமுல்படுத்தி அனைவருக்கும் PLB போனஸ் பெற்றுத்தந்தது மட்டுமில்லாமல் 2006 – 07ல் ரூ. 2301/– அரியர்ஸாகவும், 2014–15க்கு ரூ. 8976/– அரியர்ஸாகவும் பெற்று தந்தது.
3. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை CRC மூலம் அப்கிரேடேஷன் பெற்று தந்தது.
4. 1954ல் பென்ஷன் / குடும்ப பென்ஷன் திட்டத்தை அமுல்படுத்தி தொழிலாளர்களை வாழ வைத்திருப்பது.
5. HRA, இன்சென்டிவ், OT அலவன்களையும் மற்றும் அட்வான்ஸ்களையும் பெற்று தந்தது.
6. ACP க்கு பிறகு MACPS மூலம் 3 அப்கிரேடேஷன்களை பெற்று தந்தது.
7. CCL, En Cashment Leave, மாற்று திறனாளிகளுக்கு 4 நாட்கள் SCL பெற்று தந்தது.
8. LARSGESS திட்டத்தின் மூலம் வாரிசுகளுக்கு வேலை பெற்று தந்தது.
9. இரயில்வே தொழிலாளர்கள் அனைவரும் AC கோச்சில் செல்ல பாஸ் பெற்று தந்தது.
10. இறந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கம்பாஸினேட் அப்பாயின்ட்மெண்ட் பெற்று தந்தது.

### SRES - NFIR 2017ல் பெற்றுத்தந்த உத்தரவுகளில் சில

NFIR Rly. Bd. PNM Sub No. 18/2016 மியூச்சுவல், ஸ்பவுஸ் கிரவுண்ட், டிஸ்சபல்டு குழந்தைகளை பராமரிக்கும் தொழிலாளர்கள், டிஸ்சபல்டு சேலஞ் தொழிலாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த சர்வீஸ் கன்டீஷனை ரத்து செய்து இண்டர் இரயில்வே ரெக்கியூஸ்ட் டிரான்ஸ்பர் செய்ய 10.2.2017 அன்று Rly.Bd. உத்தரவு.

NFIR - Rly. Bd. PNM Sub No. 38/2016 மூலம் 33$\frac{1}{3}$ % கோட்டாவில் பதவி உயர்வு பெற உள்ள குரூப் 'D' தொழிலாளர்களுக்கு இருந்த 3 வருட சர்வீஸ் கன்டீஷனை 2 வருடமாக குறைத்து 21.4.17 Rly.Bd. உத்தரவு.

☞ NFIR - Rly. Bd. PNM Sub No. 7/2016 மூலம் GDCE, LDCE, PRQ தேர்வுகளை 6 மாதத்திற்கு ஒரு முறை நடத்தி இருக்கின்ற காலியிடங்களை பூர்த்தி செய்ய 21.4.2017ல் Rly.Bd. உத்தரவு.

☞ NFIR - Rly. Bd. PNM Sub No. 41/2016 மூலம் சர்வீஸ் / ரிட்டையர்டு தொழிலாளர்கள் தனியார் மருத்துவமனையில் செய்த அவசர சிகிச்சைக்கான செலவு தொகையை ரீ-இம்பெர்ஸ்மென்ட் பெறுவதற்கு இருந்த விதிமுறையை தளர்த்தி செய்து 1-6-2017 அன்று Rly.Bd. உத்தரவு.

☞ NFIR - Rly. Bd. PNM Sub No. 18/2016 மியூச்சுவல் டிரான்ஸ்பர் விண்ணப்பங்களை 90 நாட்களுக்குள் நடவடிக்கைகளை முடித்திட Rly.Bd. 22-9-2017 அன்று உத்தரவு.

☞ NFIR - Rly. Bd. PNM Sub No. 25/2011 AC கோச் அட்டன்டென்ட், இன்சார்ஜ் வேலைகளை அவுட்சோர்ஸிங் செய்யும் மத்திய அரசின் முடிவை மாற்றி அனைத்து இரயில்களிலும் இரயில்வேயை சார்ந்த ஒரு AC கோச் அட்டன்டென்ட், ஒரு AC கோச் இன்சார்ஜ் பணியாற்ற 11-9-2017 Rly.Bd. உத்தரவு.

☞ NFIR - Rly. Bd. PNM Sub No. 44/2016 மூலம் நைட் பெட்ரோலிங் செல்லும் டிராக் மெயின்டனர்களுக்கு Dry Cell Battery-க்காக சம்பளத்தில் மாதம் ரூ. 150/- வழங்க 7-12-2017 Rly.Bd. உத்தரவு.

☞ இரயில்வே போர்டில் 23/24-10-2017ல் நடைபெற்ற DC-JCM கூட்டத்தில் NFIR Sub No. 46/2003 கீமேன்கள் மீது திணிக்கப்பட்ட கூடுதல் வேலை பளுவை குறைக்க பரிசீலனைக்கு ஒப்புதல்.

DC-JCM Sub No. 15/2012 டிராக்மேன்களின் பாதுகாப்பிற்காக சிறிய விளக்குடன் ஹெல்மேட், வேலைக்கு தேவையான தரமான பொருட்கள், முன்னறிவிப்பு எச்சரிக்கை சாதனம், கீமேன் / மேட்களுக்கு CUG செல்போன் முதல் தவணையில் 15306ம், இரண்டாவது தவணையில் 10586ம் வழங்க ஒப்புதல்.

டிராக்மெயின்டனர்களுக்கு கீழ்கண்ட விதத்தில் 31-12-2017க்குள் பதவி உயர்வு வழங்க Rly. Bd. ஒப்புதல்.

| GP | தற்போது % | புதியது % | கூடுதலாக பதவி உயர்வு பெறுவோர் |
|---|---|---|---|
| 2800 | 6 | 10 | 4 |
| 2400 | 12 | 20 | 12 |
| 1900 | 22 | 20 | 10 |
| 1800 | 60 | 50 | - |

☞ SRES ன் தொடர் முயற்சியால் புரமோஷன் பெற்றவர்களின் பே பிக்ஸேஷனை Rule 13 of CCS(RP) Rule, 2016 படி ஆப்ஷன் அடிப்படையில் ரீ பிக்ஸேஷன் செய்து கூடுதல் இன்கிரிமெண்ட் வழங்க Rly. Bd. 31-7-2017ல் உத்தரவு.

☞ High Level Safety கமிட்டியின் SRES - NFIR தெரிவித்திருந்த புள்ளிவிவரங்களை 7வது ஊதியக்குழுவிற்கு மெமோரண்டம் மூலமாக 28-7-2014 அன்று Page No. 75-80 & 158 Para No. 14ல் SRES - NFIR தெரிவித்து வ-யுறுத்தியதின் பயனாக டிராக்மெயின்டனர்களுக்கு ரிஸ்க் & ஹார்டுஷிப் அலவன்ஸ் மாதம் ரூ. 2700/-ஐ 01-07-2017 முதல் வழங்கிட Rly. Bd. 10-8-2017 அன்று உத்தரவு. உயிரை பணயம் வைத்து வேலை செய்த டிராக்மெயின்டனர்களுக்கு பல இடங்களில் கொடுத்த பணத்தை பிடித்தம் செய்ய உத்தரவிட்ட S.Rly. நிர்வாகத்தை SRES-NFIR வன்மையாக கண்டிக்கிறது. இது போன்ற செயல் இனி தொடராமலிருக்க S.Rly. நிர்வாகத்தை வ-யுறுத்துகிறது.

☞ ரன்னிங் ஸ்டாப்களுக்கு பே லெமெண்ட் 30% தொடர்ந்திடவும், ஓய்வு பெறும் போது 55% கிடைக்கவும் Rly. Bd. உத்தரவு.

☞ இரயில்வேயில் யூனிபார்ம் பெற்ற தொழிலாளர்கள் அனைவருக்கும் டிரஸ் அலவன்ஸ் வழங்கிடவும், குறிப்பாக டிராக்மேன், ஸ்டாப் கார் டிரைவர், ரன்னிங் ஸ்டாப், கேன்டீன் ஸ்டாப், டெக்னீஷியன், சூப்பர்வைசர்கள், கமர்ஷியல் / டிராபிக் ஸ்டாப்களுக்கு வருடத்திற்கு ரூ. 5000/-மும், ஸ்டேஷன் மாஸ்டர்களுக்கு வருடத்திற்கு ரூ. 10000/-மும், நர்சுகளுக்கு மாதம் ரூ. 1800/-மும் டிரஸ் அலவன்ஸாக வழங்க 03-10-2017 அன்று Rly. Bd. உத்தரவு.

☞ ஓவர் டைம் அலவன்ஸ் என்பது சம்பளத்தின் ஒரு பகுதி. ஆகையால் தான் SRES - NFIR ஓவர் டைம் அலவன்ஸை 01.01.2016 முதல் உயர்த்தி வழங்க வலியுறுத்தியது. ஆனால் 01-07-2017 முதல் உயர்த்தி வழங்க 28-11-2017 அன்று Rly. Bd. உத்தரவு.

☞ SRES - NFIR தொடர் முயற்சியினால் கேட்கீப்பர்களுக்கு கழிவறை வசதி, குடிதண்ணீர், மின்வசதி போன்ற அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு இரயில்வே போர்டு 24-9-2015 அன்று பிறப்பித்த உத்தரவை S.Rly. நிர்வாகம் காலதாமதம் செய்யாமல் நிவர்த்தி செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகிறோம்.

☞ NHA, GKA, BDA அலவன்சுகளை 01-07-2017 முதல் வழங்குவதற்கு Rly. Bd. உத்தரவு. ஆனால் அனைத்து அலவன்சுகளையும் 01-01-2016 முதல் வழங்கிட Rly. Bd.ஐ SRES - NFIR வ-யுறுத்தியுள்ளது.

☞ டிக்கெட் செக்கிங் கேட்டகரியை கமர்ஷியல் கிளார்க் / ECRC வுடன் இணைக்கும் இரயில்வே போர்டின் முடிவை NFIR ஏற்றுக் கொள்ளவில்லை. ஸ்டேஷன் மாஸ்டர்களின் காலியிடங்களுக்கு பணியில் உள்ள கமர்ஷியல் / டிராபிக் தொழிலாளர்களில் 15% LDCE மூலமாகவும், 35% பொது தேர்வு மூலமாகவும், 50% GDCE மூலமாகவும் பூர்த்தி செய்ய வேண்டும். ஆனால் GP 4600/-க்கு DR கோட்டா மூலம் நேரடி தேர்வு செய்வதை SRES - NFIR எதிர்க்கிறது. ஏனென்றால் இருக்கின்ற 75% டிராபிக் / கமர்ஷியல் ஸ்டாப் தொழிலாளர்கள் GP 4200/-ல் ஸ்டேஷன் மாஸ்டர் பணிக்கு சென்று பயன்பெறலாம்.

- பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை CRC கேடர் ரீ ஸ்டெக்சரிங் மூலம் பெறுகின்ற பதவி உயர்வை 01-11-2013 அன்று பெற்ற பிறகு, டெக்னீஷியன் கிரேடு II & I மெர்ஜர் செய்ய வேண்டும் என்ற SRES - NFIR கோரிக்கையை அமுல்படுத்த தொடர்ந்து வலியுறுத்தியதால், இதனை ஏற்க முடியாத மத்திய அரசு, மூன்று ஆண்டுகளில் 16% ஆக இருந்த Sr.Tech. ஐ 26% ஆகவும், 44% ஆக இருந்த Tech. Gr. I ஐ 51% ஆகவும், 20% ஆக இருந்த Tech. II ஐ 8% ஆகவும், 20% ஆக இருந்த Tech. Gr III ஐ 15% ஆகவும் மாற்றி 01-09-2016 முதல் மீண்டும் CRC ஐ அமுல்படுத்தியதால் 100 தொழிலாளர்களில் 32 தொழிலாளர்களுக்கு பதவி உயர்வை பெற்றுத்தந்தது SRES - NFIR என்பதை அனைவரும் அறிவார்கள். இதனடிப்படையில் உயர் பதவியில் உள்ள காலியிடங்களை Tech. Gr. IIIக்கு கொண்டு வந்து ஹெல்பர்களுக்கு பதவி உயர்வு வழங்க நிர்வாகத்தை SRES - NFIR வலியுறுத்தியுள்ளது.
- NFIR - Rly. Bd. PNM Sub No. 20/2006 மூலம் 01.01.2004க்கு பிறகு இரயில்வேயில் வேலைக்கு வந்து இறந்த தொழிலாளர்களின் குடும்பத்திற்கு பென்ஷனை வழங்க 29-05-2009 அன்று Rly. Bd.யிடம் உத்தரவை பெற்றுத் தந்தோம்.
- NFIR - Rly. Bd. PNM Sub No. 13/2016 மூலம் புதிய பென்ஷன் திட்டத்தில் உள்ளவர்களுக்கு Rule 38,49,50 & 54 of CCS (Pension) Rules, 1972 அடிப்படையில் பென்ஷன், குடும்ப பென்ஷன், இன்வேலிட் பென்ஷன், கிராஜுட்டி & டெத் கம் கிராஜுட்டி வழங்க 31.07.2017 அன்று Rly. Bd.யிடமிருந்து உத்தரவை பெற்றுத் தந்தது SRES - NFIR. இருப்பினும் புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்வதை இலக்காக நிர்ணயித்து தொடர்ந்து போராடி வருவதும் SRES - NFIR என்பதை அனைவரும் அறிவீர்கள்.
- NFIR - Rly. Bd. PNM Sub No. 57/2016 ரன்னிங் ஸ்டாப் தொழிலாளர்களின் லீவ் சம்பளத்திற்கு 30% பே எலமென்டை கணக்கிட்டு அரியர்சுடன் வழங்க Rly. Bd. 16-10-2017 அன்று உத்தரவு.
- NFIR - Rly. Bd. PNM Sub No. 5/2017 7வது ஊதியக்குழுவின் பரிந்துரைப்படி 14.29% சம்பள உயர்வு கிடைக்காத ரன்னிங் ஸ்டாப் தொழிலாளர்களுக்கு சம்பளத்தை திருத்தம் செய்து உயர்த்தி வழங்க Rly. Bd. 21-8-2017 அன்று உத்தரவு.
- NFIR - Rly. Bd. PNM Sub No. 18/2004 & 9/2012 அப்பென்டெக்ஸ் II & III தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஸ்பெஷல் பே அலவன்ஸ் உயர்த்தி வழங்க Rly. Bd. உத்தரவு.
- NFIR எடுத்த தொடர் முயற்சியின் பயனாக கடந்த 15 ஆண்டுகளில் RRB/RRC மூலம் வேலைக்கு வந்த படித்த இளைஞர்களுக்கு GDCE/LDCE மூலம் தேர்வு எழுதுவதற்கு இருந்த சர்வீஸ் கன்டீஷனை தளர்த்தியதால், ஆயிரக்கணக்கானோர் SM,TC,BC,Guard, ALP, சூப்பர்வைசர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- NFIR வலியுறுத்தியதின் அடிப்படையில் ரூ. 4800/- ஆக இருந்த நர்ஸிங் அலவன்சை மாதம் ரூ. 7200/- ஆகவும், ஆப்ரேஷன் தியேட்டர் அலவன்ஸை ரூ. 360/- லிருந்து மாதம் ரூ. 540/- ஆகவும், HPCA/PCA அலவன்ஸை மாதந்தோறும் ரூ. 5300/-, ரூ. 4100/- ஆகவும் உயர்த்தி வழங்க Rly. Bd. உத்தரவு.
- NFIR ன் தொடர்முயற்சியினால் ரூ. 1500/- ஆக இருந்த Children Educational அலவன்ஸ் மாதம் ரூ. 2250/- ஆக இரண்டு பிள்ளைகளுக்கும், ரூ. 4500/- ஆக இருந்த ஹாஸ்டல் சப்ஸைடி மாதம் ரூ. 6750/- ஆகவும், டிராவலிங் அலவன்ஸ் லெவல் 1 முதல் 5 வரை ரூ. 450/- ஆகவும், லெவல் 6 முதல் 8 வரை ரூ. 750/- ஆகவும், ரூ. 500/- ஆக இருந்த Fixed Medical Allowance ரூ. 1000/- ஆகவும் உயர்த்தி வழங்க Rly. Bd. உத்தரவு.
- NFIR ன் தொடர்முயற்சியால் ரன்னிங் ஸ்டாப் மாதந்தோறும் பெற்ற அடிஷனல் அலவன்ஸை ரூ. 500/- லிருந்து ரூ. 1125/- ஆகவும், ரூ. 1000/- லிருந்து ரூ. 2250/- ஆகவும் மற்றும் லோகோ பைலட் / கார்டு, சீனியர் பேசஞ்சர் கார்டுகளுக்கு மாதம் ரூ. 750/- வழங்க Rly. Bd. உத்தரவு.
- SRES - NFIR எடுத்த தொடர் முயற்சியினால் S.Rly. யில் ஆக்ட் அப்ரண்டீஸ் தேர்வுக்கு இருந்த எழுத்து தேர்வை ரத்து செய்து SSLC / ITI மார்க் அடிப்படையில் தமிழக மற்றும் கேரளாவை சார்ந்தவர்கள் தற்போது தேர்வு செய்யப்பட்டு வருகின்றது.
- மினிஸ்டீரியல் தொழிலாளர்களின் கல்வித்தகுதி அடிப்படையில் ஆரம்ப சம்பளத்தை GP 2800/- ஆக வழங்கிடவும், மினிஸ்டீரியல் தொழிலாளர்களுக்கு உள்ள டைப்பிங் டெஸ்டை ரத்து செய்திடவும் NFIR Rly. Bd.யிடம் வலியுறுத்தி வருகிறது.
- DC/JCM Item No. 28/2012 மூலம் சபைவாலா தொழிலாளர்களுக்கு அவின்யூ ஆப் புரமோஷனாக GP 1900/-, 2400/-, 2800/- வழங்க Rly. Bd.யிடம் NFIR வலியுறுத்தி வருகிறது.
- MACPS மூலம் பதவி உயர்வு பெறுவோர்க்கு ACRல் "Very Good" இருந்தால் தான் பதவி உயர்வு என்ற ஏதேச்சதிகார உத்தரவை மாற்றி "Good" இருந்தாலே போதும் என்ற உத்தரவை வழங்க மத்திய அரசிடம் NFIR தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.
- P.Way டெக்னீஷியன்ஸ், OHE, TRD டெக்னீஷியன்ஸ், டிராபிக் ஸ்டாப், C & W ஸ்டாப், சிக்னல் ஸ்டாப், எலக்ட்ரிக்கல் ஸ்டாப், ஒர்க் ஷாப்பில் பணியாற்றும் வெல்டர்களுக்கு ரிஸ்க் & ஹார்டுஷிப் அலவன்ஸ் மாதம் ரூ. 2700/- வழங்க Rly. Bd. யிடம் NFIR தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.
- ஒர்க்ஷாப்பில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு 7வது ஊதியக்குழு அடிப்படையில் உயர்த்தப்பட்ட இன்சென்டிவ்வை வழங்க PNM Sub No. 12/2017 மூலம் Rly. Bd. யிடம் NFIR வலியுறுத்தியுள்ளது.
- 7வது ஊதியக்குழவின் மோசமான பரிந்துரைகளான 2.57 மடங்கு சம்பள நிர்ணயத்தை 3.7 மடங்காக மாற்றிட, குறைந்த பட்ச சம்பளத்தை ரூ. 26000/- ஆக உயர்த்திட, HRA 30%, 20%, 10% ஆக மாற்றிட, ரத்து செய்த அலவன்சுகளையும், அட்வான்சுகளையும் 01.01.2016 முதல் உயர்த்தி வழங்கிட, புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்து கேரன்டி பென்ஷன் வழங்கிட, 2.5 லட்சம் காலியிடங்களை உடனே நிரப்பிட, பயிற்சி முடித்த ஆக்ட் அப்ரன்டீஸ்களுக்கு வேலை வழங்கிட, வருமான வரி உச்சவரம்பை உயர்த்திட நடவடிக்கை எடுக்காததை கண்டித்தும், பல ஆண்டுகளாக இருந்த இரயில்வே பட்ஜெட்டை பொது பட்ஜெட்டில் சேர்த்து இரயில்வே துறைக்கு அநீதி இழைத்ததையும், பிபேக்தேப்ராய் கமிட்டியின் நாசகார பரிந்துரையான 100% அந்நிய நேரடி முதலீட்டை அனைத்து துறைகளிலும் புகுத்தி இரயில்வேயை முதலாளிகளுக்கு தாரைவாக்க துடிப்பதை கண்டித்தும், இரயில்வே மற்றும் தொழிலாளர்களை காக்க தவறும் மத்திய அரசின் தொழிலாள விரோத போக்கை கண்டித்தும் இந்திய இரயில்வே முழுவதும் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருவது SRES - NFIR என்பதை அனைவரும் அறிவார்கள்.

- மத்திய அரசின் தொழிலாள விரோத போக்கை கண்டித்து தேசிய அளவில் NJCA [நேஷனல் ஜாயின்ட் கவுன்சில் ஆப் ஆக்ஷன்] மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பில் உள்ள NFIR, AIRF, Confederation, AIDEF, INDWF, NFPE, FNPO ஆகியோர் கூட்டுச் சேர்ந்து **2016 ஜூலை 11 முதல் நாடு தழுவிய தொடர் வேலை நிறுத்தம்** செய்வதென முடிவெடுத்து, நாடு முழுவதும் உள்ள மத்திய அரசு தொழிலாளர்களிடையே ஒன்றுபட்ட போராட்டமாக உருவெடுத்த நேரத்தில் 2016 ஜூன் 30 அன்று இரவு மத்திய அமைச்சர்களிடம் தொலைபேசியில் பேசிவிட்டதாகவும், கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டதாகவும் கூறி 2016 ஜூலை 01 அன்று பகல் SRMUன் பொதுசெயலாளரும், AIRFன் நிர்வாக தலைவருமான திரு. **N.கண்ணையா** அவர்கள் தன்னிச்சையாக வேலை நிறுத்ததை வாபஸ் பெற்றதை அனைவரும் அறிவோம். இருப்பினும் NJCA தலைவர்கள் 01.07.2016 அன்று மாலை புதுடெல்லியில் கூடி எவ்வித முடிவும் இதுவரை எடுக்கவில்லை. வேலை நிறுத்த போராட்டம் திட்டமிட்டபடி நடக்கும் எனவும் 06.07.2016 வரை மத்திய அரசிற்கு அவகாசம் கொடுத்தனர். மீண்டும் NJCA தலைவர்கள் ஒன்று கூடி மத்திய அமைச்சர்களிடம் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் 06.07.2016 இரவு 8.50 மணிக்கு நாம் வைத்த கோரிக்கைகளுக்கு High Level Committee அமைத்து 4 மாதத்திற்குள் தீர்வு காணப்படும் என மத்திய அரசின் குரூப் ஆப் மினிஸ்டர்ஸ் வாக்குறுதி தந்தனர். இதனடிப்படையில் 11.07.2016 முதல் நடத்தவிருந்த காலவரையற்ற தொடர் வேலை நிறுத்தம் தள்ளி வைப்பது என மேற்கூறிய அனைத்து தொழிற்சங்க தலைவர்களும், கம்யூனிஸ்ட் தொழிற்சங்க தலைவர்கள் உட்பட கையொப்பமிட்டுள்ளனர். இங்குள்ள DREUக்கு தெரிந்தும், தெரியாததுபோல் இரயில்வே சம்மேளனங்கள் மௌனம் காப்பதாகவும், எதிர்த்து போராடாமல் அமைதி காப்பதாகவும் சொல்லி முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்க பார்க்கிறது தான் விந்தையாக உள்ளது. ஒரு பொய்யை திரும்ப திரும்ப சொல்லி அதனை உண்மையாக சித்தரிக்க முயலும் DREUன் செயலை தொழிலாளர்களே புரிந்து கொள்வீர்.

- இந்திய இரயில்வேயில் ஆங்காங்கே தொழிலாளர்கள் செய்கின்ற முக்கியமான வேலைகளை அவுட்சோர்ஸிங் விடுவதும், இருக்கின்ற இரயில்வே இடங்களை தனியாருக்கு பிரித்துக் கொடுப்பதிலும், இராயபுரம் உள்ளிட்ட இரயில்வேயில் உள்ள அச்சகங்களை மூடுவதிலும், நைட் பெட்ரோலிங் வேலையை தனியாரிடம் கொடுப்பதிலும், அரியானா மாநிலத்தில் உள்ள வழக்கை காரணம் காட்டி LARSGESS திட்டத்தின் மூலம் வாரிசுகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தை நிறுத்துவதிலும் நேரத்தை கழிக்கும் மத்திய அரசை கண்டித்து துணிவுடன் தொடர்ந்து போராடுவது SRES - NFIR என்பதை அனைவரும் அறிவார்கள்.

- ஏற்கனவே அவசர கோலத்தில் புகுத்தப்பட்ட I PAS திட்டத்தினால் நார்மல் / CRC மூலம் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு சரியான சம்பள நிர்ணயம் செய்யப்படவில்லை. பலருக்கு அரியர்ஸ்சும் வழங்கப்படவில்லை. 7வது ஊதியக்குழுவின் பரிந்துரைப்படி ஆப்ஷன் கொடுத்தவர்களுக்கு கூட இது நாள் வரை சரியான பே பிக்சேஷன் செய்யப்படவில்லை. தொழிலாளர்களுக்கு தேவையான தரமான உணவும், பாதுகாப்பு வசதிகளும், குடியிருக்க வீடுகளும் செய்து தர முடியவில்லை. இதை சீர்படுத்த முயற்சி எடுக்காத மத்திய அரசு. இரயில்வேயில் அவசியமில்லாத பயோமெட்ரிக் அட்டென்டென்ஸை அமுல்படுத்த அவசரம் காட்டுவதை SRES - NFIR கண்டிக்கிறது.

- S.Rly.ல் பணியாற்றும் வட மற்றும் தென் மாநில மக்களின் நலனுக்காக NFIR ன் முயற்சியால் பெறப்பட்ட Rly. Bd. உத்தரவுப்படி மியூச்சுவல் டிரான்ஸ்பர் விண்ணப்பங்களை 90 நாட்களுக்குள் முடிக்காமல் தட்டிக்கழிக்கும் நிர்வாகத்தின் அலட்சிய போக்கை கண்டிப்பதோடு உரிய நடவடிக்கை எடுத்திட S.Rly. நிர்வாகத்தை SRES வலியுறுத்துகிறது.

- S.Rly.ல் லஞ்ச லாவண்யங்களை ஒழித்திட அனைத்து கேட்டகிரி தொழிலாளர்களின் நன்மைக்காக சீனியாரிட்டி, புரமோஷன்,குவார்ட்டர்ஸ் மற்றும் ரெக்கியூஸ்ட் டிரான்ஸ்பர் ரிஜிஸ்டிரேஷன்களை ரயில்நெட் மூலமாக வெளியிட்டு குழப்பத்தை கலைந்திட SRES - NFIR நிர்வாகத்தை வலியுறுத்துகிறது.

- இரயில்வே தொழிலாளர்களின் மேற்கண்ட நியாயமான பல்வேறு கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளாத மத்திய அரசை கண்டித்து பாராளுமன்றம் முன்பாகவும், GM / DRM / CWM / டெப்போ அலுவலகங்கள் / பணிமனைகள் முன்பாகவும் தொடர்ந்து பல்வேறு போராட்டங்களையும், கண்டன கூட்டங்களையும் SRES - NFIR தொடர்ந்து நடத்தி வருகிறது.

  தொழிலாளர்களுக்கு விரோதமாக S.Rly.ல் நடைபெறும் அராஜகம், அடாவடித்தனம், கொலை வெறித்தாக்குதல், பா–யல் கொடுமைகளை எதிர்த்தும், உரிய நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தியும் பலவித போராட்டங்களை தொழிலாளர்களின் நன்மைக்காக SRES - NFIR தொடர்ந்து நடத்தி வருகிறது.

- மத்திய தொழிற்சங்கங்கள் ஒன்று கூடி நாடு தழுவிய ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்த போது அதற்கு ஆதரவாக மத்திய அரசை கண்டித்து ஆங்காங்கே SRES - NFIR கண்டன ஆர்பாட்டங்களை நடத்தியது. தொடர்ச்சியாக 2017 நவம்பர் 09 முதல் 11 வரை **பாராளுமன்றம்** முன்பு நடைபெற்ற **தொடர் தர்ணா போராட்டத்தில்** SRES - NFIR கலந்து கொண்டு போராட்டத்திற்கு வலுவூட்டியதை அனைவரும் அறிவார்கள். முன்னதாக தொடர் தர்ணா போராட்ட விளக்கத்தை 26.10.2017 முதல் 31.10.2017 வரை S. Rly. முழுவதும் கண்டன கூட்டங்களை நடத்தி தொழிலாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திய சங்கம் SRES - NFIR என்பதை தொழிலாளர்கள் நன்கு அறிவார்கள்.

- இரயில்வேயை காத்திட, தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாத்திட, இரயில்வே தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மேம்பட

**மத்திய அரசின் தொழிலாள விரோத போக்கை கண்டித்து**
**நாம் அனைவரும் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு போராடுவோம்! கோரிக்கைகளை வென்றெடுப்போம்!!**

**Dr. M.இராகவைய்யா**
President / SRES & GS / NFIR

அறிக்கை எண். 856
**nfirindia.org & sresnfir.org**

**P.S.சூரியபிரகாசம்**
GS/SRES & JGS / NFIR